இருக்கிற முத்திரைத் தாள்களை சேலத்திலே கொண்டு வந்து அதிக விலைக்கு விற்பதும், சேலத்திலே இருப்பதை, மற்ற இடங்களிலே எங்கே டிமாண்ட் இருக்கிறதோ அந்தப் பகுதி களுக்கு கள்ள மார்க்கெட்டிலே விற்பதும் என்ற நிலை இருக் கிறது. எனவே, இதுபோன்ற ஸ்டாம்ப் வெண்டார்களை, அதிகாரிகளை வைத்து, சோதனை செய்து, கண்டுபிடிக்கப் பட்டால், தவறு செய்த அவர்களுடைய உரிமம் ரத்து செய்யப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறு செய்பவர்களை நிச்சய மாக இந்த அரசு தண்டிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில பேர்கள் கள்ள பத்திரம் முடிக்கிறார்கள். எப்படி என்றால், ஒருவர் அரசாங்க நிலத்தில் குடியிருப்பார். அரசாங்க நிலத்தில் குடியிருந்தால், 30 வருடங்கள் குடியிருந்தால்தான் அது அவருக்குச் சொந்தமாக்கப்படும் என்று சட்டம் இருப்பதால் 30 வருடங்களுக்கு முன்னால் உள்ள பழைய பத்திரத்தை வாங்கி, அதை முடித்து, அரசாங்கத்திடம் காண்பித்து, அந்த நிலத்தைத் தான் பெறவேண்டும் என்று சில பேர்கள் செய்தும் இருக்கிறார்கள். இதற்கு ஏதாவது தடுப்பு நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர் கள் விவரமாக என்னிடத்திலே அந்தத் தகவலைக் கொடுத்தால், அதைப்பற்றி உரிய அதிகாரிகளிடத்திலே விவாதித்து, உங்களுக்கு விவரத்தை நான் அளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 48. டாக்டர் தே. குமாரதாஸ், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

48—

கணபதியான்கடவு பகுதியில் பாலம்.

* 200—டாக்டர் தே. குமாரதாஸ் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

1991 செப்டம்பர் 18]

(அ) கடற்கரை சாலைகளை இணைக்கின்ற விதத்தில் கணபதியான்கடவு பகுதியில் ஒரு பாலம் அமைக்க மதிப்பீடு எடுக்கப்பட்டுள்ளதை நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடற்கரைச் சாலைகளை இணைக்கின்ற விதத்தில் இந்த கணபதியான்கடவுப் பாலம் கட்டப்படவேண்டும் என்று சொல்லி, ஏற்கனவே நமது மரியாதைக்குரிய முன்னாள் அமைச்சர் இந்த நிர்வாகத்தைக் கவனத்தில் கொண்டு வந்திருந்த அமைச்சர் திரு. முத்துசாமி அவர்கள்— நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்த நேரத்திலே—இதைக் குறித்து ஒரு அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். அதிலே ஒரு கோடியே 15 லட்ச ரூபாய்க்கு அந்த நேரத்திலே எஸ்டிமேட் எடுக்கப்பட்டது. அப்போது 11 பாலங்கள் இதுபோன்று எடுக்கப்பட்டு, பொருளாதார நிலையினால், பார்ட் 2 ஸ்கீமிலே அதை எடுக்கலாம் என்று சொல்லி, நிறுத்தி வைத்தார்கள். ஆனால் இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒட்டு மொத்தமாக அப்படி ஒரு திட்டம் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இதை அரசு மீண்டும் கவனத்தில் கொண்டு, இந்தக் கடற்கரைச் சாலைகளை இணைக்கின்ற விதத்தில் விரைவில், இந்த கணபதியான்கடவுப் பாலத்தை அமைத்துத் தர முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9.40

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையின் பெயர் புதுக்கோடு–கொள்ளங்கோடு சாலையாகும். இந்தச் சாலையின் குறுக்கே கட்டப்பட வேண்டிய பாலத்தினுடைய அளவு 130 மீட்டராகும். அதற்கு தற்போதைய மதிப்புபடி ஆகின்ற செலவு ரூ. 2 கோடி, இது ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கின்ற சாலை, ஆகவே இவ்வளவு பெரிய

தொகையை இந்த சாலைக்கு பார்ட்-2 ஸ்கீம் என்று சொல்லப் படுகின்ற திட்டத்திலோ அல்லது (Central Road Fund) என்ற திட்டத்திலோ இதுவரையில் சேர்க்கப்படவில்லை. ஆகவே தான் இதை இல்லை என்று சொன்னேன். ஆகவே இதைப்பற்றி அரசு தகுந்த கவனத்தோடு பரிசீலித்து, அது பயனளிக்குமாயின் அதற்கான திட்டத்தை அரசு பரிசீலித்து முடிவு செய்யுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசிடம் ஏற்கனவே ஒரு திட்டம் உள்ளது. கடற்கரைச் சாலைகள் அத்தனையும் இணைக்கப்படவேண்டுமென்று. அப்படி இணைக்கப்படுகின்றபோது இந்தப் பாலம் இல்லாமல் இணைக்க முடியாது. மத்திய அரசு கூட ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார்கள். அதிலேகூட நான் கேள்விப்பட்ட வரைக்கும், திருநெல்வேலி மாவட்டம், அதற்குப் பிறகு கன்னியாகுமரியிலே கீழமணக்குடி, மேலமணக்குடி, இப்படி இணைத்து வைப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பாலத்தை இணைத்தால் (Kerala Ceastal Complete Belt fulfil) ஆகிவிடும், நம்முடைய ஏரியாவில், இது மிக மிக (essential) பாலம்தான். எனவே அதிகாரிகள் எப்படிப்பட்ட தகவல்களை அமைச்சருக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்பது தெரியாது. இது பல காலமாக—பொன்னப்ப நாடார் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலத்திலிருந்தே—சட்டமன்றம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே கேட்கப்பட்டு வருகிறது. அப்போது சில பல லட்சங்களாக இருந்து, இப்போது சில கோடிகளை அடையக்கூடிய நேரத்திலே அது சென்று கொண்டிருக்கிறது. எனவே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கருணை கூர்ந்து எங்களுக்கு அந்த ஒரு பாலத்தை கணபதியான்கடவு பால திட்டத்தை அமைப்பதற்கான உத்தரவினை பிறப்பித்துத் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். இது மத்திய அரசினுடைய (Central Road Fund) என்ற ஸ்கிமீல் எடுக்கப்படவில்லை என்று சொல்லியிருக்கிறேன். ஆகவே இதுவரையில் நமது மாண்புமிகு உறுப்பினர் ஏற்கனவே சட்டமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறார். அதையெல்லாம் அவர் ஏற்கனவே வலியுறுத்திப் பெற்றிருக்கலாம். ஆனால் கடற்கரைச் சாலைகள் திட்டத்தைப் பொறுத்தமட்டிலே கடற்கரை ஓரங்களில் வருகின்ற சாலைகளை இணைக்கவேண்டுமென்ற திட்டம் ஏற்கனவே நம்மிடத்திலும் மத்திய அரசிடத்திலும் இருக்

கிறது. அது ஒரு நீண்ட நெடுநாளைய திட்டமாகும். அதற்கான செலவு என்பது அதிகமாகும் என்கின்ற காரணத்தினாலே மைய அரசிடத்திலும் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் வலியுறுத்தி இருக்கிறார்கள். அது சம்பந்தமாக பல கோரிக்கைகளை நாங்கள் கொடுத்திருக்கிறோம். ஆகவே ஊராட்சி ஒன்றியத்தினுடைய சாலையின் குறுக்கே ரூ. 2 கோடி அளவில் பாலத்தை கட்ட வேண்டுமென்பது நெடுநாளைய கோரிக்கை என்று ஒத்துக் கொண்டாலும், ஏற்கனவே இருந்த காலங்களிலே நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை மிகவும் வலியுறுத்தி பெற்றிருந்தால் மிகவும் நலமாக இருந்திருக்கும். இருந்தாலும் நான் ஏற்கனவே சொன்னதைப்போல அந்த கடற்கரைச் சாலைத் திட்டங்களை எடுத்துக்கொள்கிற நேரத்திலே இந்த அரசு அதை ஏற்று பரிசீலித்து, அது மக்களுக்கு பயனுள்ளதாக இருக்குமேயானால் அது பற்றி முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு தொகுதிக்கு மாத்திரமல்ல. இந்த பாலத்தைப் பொறுத்தவரையில் எங்களுடைய மாவட்டத்திலே திருவனந்தபுரத்திலிருந்து கன்னியாகுமரி மாவட்டத்தை இணைக்கின்ற ஒரு மிக மிக முக்கியமான பாலமாகும். 1972-லிருந்து பல கேள்விகள் போடப்பட்டிருக்கிறது. கடிதங்கள் நாங்கள் பல தடவை போட்டிருக்கிறோம். நானும் போட்டிருக்கிறேன். டாக்டர் குமாரதாஸ் அவர்களும் போட்டிருக்கிறார்கள். ஆனால் எல்லோரும் பார்ட்-2 ஸ்கீம்-ல் சேர்க்கப்பட்டுள்ளதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்த பார்ட்-2 ஸ்கீம் என்றால் என்ன என்று எங்களுக்குப் புரியவில்லை. ஆகவே தயவு செய்து இந்த முறையாவது நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே இது நடக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பார்ட்-2 ஸ்கிம் என்றால் என்ன என்பதைப் பற்றி விவரம் தெரிய வேண்டுமானால், பார்ட்-2 ஸ்கீம் திட்டத்தில் என்னென்ன எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்ற கேள்வியை அவர் தனியாகப் போடுவார்களேயானால் அதற்கான விளக்கங்களை, பார்ட்-2 திட்டம் என்றால் என்ன, அது எந்த அடிப்படையில் எடுக்கப்பட்டு, என்ன வேலைகள் நடக்கின்றன என்பதைப் பற்றி அவர் தனிக் கேள்வி போட்டால் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தப் பாலத்தைப் பொறுத்தவரையில் நான் தெளிவாக பதில் சொல்லிவிட்டேன். ஆகவே கடற்கரைச் சாலையை இணைக்கின்ற நேரத்திலே இந்தப் பாலம் அவசியம் எனக் கருதினால் அது மக்களுக்கு நன்மை பயக்குமானால், நான் ஏற்கெனவே சொல்லியபடி இந்த அரசு அதை பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 49, திரு. ம. சின்னசாமி, டாக்டர் சா. சுந்தரராஜ், திரு. என். பன்னீர் செல்வம், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

49—

கங்கை—காவேரி நதிகள் இணைப்புத் திட்டம்

*217— திரு. ம. சின்னசாமி,
டாக்டர் சு. சுந்தரராஜ்,
திரு. என். பன்னீர்செல்வம்:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கங்கை—காவேரி நதிகள் இணைப்புத் திட்டம் குறித்து அரசு பரிசீலித்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

முற்பகல் 9.45

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சில மாறுதல்களுடன் கூடிய அத்தகைய இணைப்புக்கு தமிழக அரசு வற்புறுத்திக்கொண்டிருக்கிறது.

திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கங்கை-காவேரி இணைப்புத் திட்டத்தை அரசு வற்புறுத்திக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் கடந்த பத்து நாட்களுக்கு முன்னாலே நாடாளுமன்றத்திலே பேசிய மத்திய நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கங்கை—காவேரி இணைப்புத் திட்டம் என்பது பொருளாதார ரீதியிலும் தொழில்நுட்ப ரீதியிலும் சாத்தியம்